# <u>தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>
# <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள சில தேர்வுகளில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக சமூக ஊடகங்களிலும் செய்தி ஊடகங்களிலும் கடந்த சில நாட்களாக பல்வேறு ஊகங்களுக்கு இடமளிக்கும் வகையில் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

1. 2019ஆம் ஆண்டு தொகுதி - 4 தேர்வில் முறைகேடு நடைபெற்றுள்ளது என்ற செய்தி சமூக வலைதளங்கள் வாயிலாக அறியப்பட்டவுடன், தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழுமம் தாமாக முன்வந்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென உறுதியாக முடிவெடுத்து செயலர் மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரை அறிவுறுத்தியது. இதையடுத்து தலஆய்வுப்பணிகள், ஆவணங்கள் ஆய்வு, நேரடி விசாரணைகளின் மூலம் தவறுகள் நடைபெற்றது உறுதிசெய்யப்பட்டதன் அடிப்படையில் மேல் விசாரணைக்கென காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தகுதிவாய்ந்த தேர்வர்கள் கலந்தாய்வுக்கு விரைவில் அழைக்கப்படுவர்.

2. இதைத்தொடர்ந்து, 2017ல் நடைபெற்ற தொகுதி 2A பணிகளுக்கான தேர்விலும் தவறு நடந்துள்ளது என சமூக ஊடகங்கள் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களிலும் வெளிவந்துள்ள செய்திகளை தலைவர் உறுப்பினர்கள் உள்ளடங்கிய தேர்வாணையக் குழுமம் கவனமுடன் ஆராய்ந்து தவறுகள் நடந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதால், இத்தேர்வு குறித்தும் விரிவான குற்றவியல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய ஆவணங்களை காவல் துறையிடம் ஒப்படைத்துள்ளது.

3. மேலும் கடந்த சில தினங்களாக ஊடகங்களில் தொகுதி 4 மற்றும் தொகுதி 2Aஐத் தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் தேர்விலும் தவறு நடந்திருப்பதால் அத்தேர்வு இரத்து செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் தேர்வைப்பொறுத்தவரை முன்னனுபவ சான்றிதழ் (Experience Certificate) சரிபார்ப்பு போக்குவரத்துத் துறை மூலமாக செய்யப்பட்டு அத்துறை அளித்த விவரங்களின் அடிப்படையில் 33 விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டது. தற்போது மாண்புமிகு உயர்நீதி மன்றம் தனது ஆணையில் போக்குவரத்துத் துறை நடத்திய முன் அனுபவ சான்றிதழ் சரிபார்ப்பில் தவறு நிகழ்ந்துள்ளதாக கூறி இப்பணியை முழுவதும் மறுஆய்வு செய்ய போக்குவரத்துத் துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இதில் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட முடிவுகள் குறித்து எவ்வித ஐயப்பாடும் எழுப்பப்படவில்லை.

4. இதுபோலவே தற்போது நடந்து முடிந்துள்ள ஒருங்கிணைந்த பொறியாளர் பணித் தேர்வு முடிவுகளில் அடுத்தடுத்த பதிவெண்கள்கொண்ட தேர்வர்கள் தஞ்சாவூர் தேர்வு மையத்திலிருந்து அதிக எண்ணிக்கையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்தும் தேர்வாணையம் தீவிர ஆய்வு மேற்கொண்டது. இச்செய்திகளில் வெளிவந்துள்ள பதிவெண்கள் அனைத்தும் வேளாண்

பொறியியல் தேர்வர்களுடையதாகும். இத்தேர்வில் அரசு விதிகளின்படி இளநிலை பொறியாளர் (வேளாண் பொறியியல்) பதவி, வேளாண் பொறியியல் படித்த மாணவர்களுக்கான முன்னுரிமைப் (Priority) பதவியாகும். வேளாண் பொறியியல் படித்த தகுதியான தேர்வர்கள் இல்லாத பட்சத்தில் மட்டுமே இதர பொறியியல் மாணவர்களுக்கு இப்பணியில் இடமளிக்கப்படும். ஆகையால் இத்தேர்வு முடிவுகளில் மற்ற பொறியியல் படித்த தேர்வர்களைக்காட்டிலும் குறைந்த மதிப்பெண் பெற்றிருந்தாலும் வேளாண் பொறியியல் பட்டம் பெற்ற தேர்வர்கள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளனர். இதில் எந்தவிதமான தவறுகளும் நடைபெறவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

5. இதுமட்டுமல்லாமல் 2019ல் நடைபெற்ற தொகுதி 1ல் தேர்வாகியுள்ள முதல் இரண்டு இடங்களைப் பெற்றுள்ள தேர்வர்களின் தெரிவுகுறித்து சமூக ஊடகங்களிலும் இறுதியாகத் தெரிவுபெற்ற 181 தேர்வர்களில் 150 பேர் ஒரே பயிற்சி மையத்தைச் சேர்ந்தவர்கள் என்று செய்தி ஊடகங்களிலும் பல்வேறு ஊகங்களுக்கு இடமளிக்கும் வகையிலும் தேர்வாணையத்தின் மாண்பைக் குலைக்கும் வகையிலும் செய்திகள் வெளிவந்துள்ளன. இச்சந்தேகங்களையும் தேர்வாணையம் கவனமுடன் ஆராய்ந்து தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்ததன் அடிப்படையில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என உறுதிபட தெரியவருகிறது. இத்தேர்வு முடிவுகள் வெளிவந்த ஒரு வார காலத்திற்குள் பல்வேறு பயிற்சி மையங்கள் நாளிதழ்களில் தங்கள் மையங்களிலிருந்து தேர்ச்சி பெற்றுள்ளதாக அளித்துள்ள தேர்வர்களின் எண்ணிக்கை 300ஐத் தாண்டும். இவ்வாறாக பயிற்சி மையங்கள் அளிக்கும் விளம்பரங்களில் ஒரே தேர்வரை ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சி மையங்கள் உரிமை கோரும் போக்கு உள்ளது.

மேற்கூறிய இனங்கள் அனைத்திலும் முறையான புகார்கள் எதுவும் பெறப்படாமலே ஊடகங்களில் வந்த செய்திகளின் அடிப்படையில் தேர்வாணையம் விசாரணை செய்து தகுந்த முகாந்திரம் இருக்கும் இனங்களில் உரிய விசாரணைக்கு ஆவன செய்துள்ளது. இனி வரும் காலங்களிலும் குறிப்பிட்ட புகார்கள் / செய்திகள் தேர்வாணையத்தின் கவனத்திற்கு வரும்போது, அது எவ்வளவு சிறியதாக இருப்பினும் தாமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்வதுடன் வெளிப்படையான ஆய்வுகள் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் தேர்வாணையம் உறுதியாக உள்ளது.

தேர்வர்களும், தங்கள் சமூகப் பொறுப்புணர்ந்து நேர்மையான வழிகளில் மட்டும் தேர்வினை எதிர்கொள்ளுமாறும் எவ்வித முறைகேடுகளுக்கும் துணை போகாமல் இருக்கும்படியும் இடைத்தரகர்களை நம்பவேண்டாம் என்றும் இதுகுறித்த தகவல் தெரிய வரும்போது தேர்வாணையத்தின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பல்வேறு ஊடகங்களில் ஊகங்களின் அடிப்படையில் வரும் சில செய்திகளை கண்டு அச்சமடையாமல் தேர்வாணையத்தின் ஒளிவு மறைவற்ற நடவடிக்கைகள் மீது முழு நம்பிக்கை வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இனி வரும் காலங்களில், இது போன்ற தவறுகள் மட்டுமின்றி வேறு எந்த தவறும் நிகழாவண்ணம் இருக்க தகுந்த சீர்திருத்த நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும்.

செயலாளர்

31.01.2020